| தரம் - 13 (2024) | கணக்கீடு - II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

*01)* வரையறுத்த காசா கம்பனியின் 31.03.2023 இல் உள்ளவாறான பரீட்சை மீதி

| விபரம் | வரவு (000) | செலவு (000) |
|---|---|---|
| ஒவ்வொன்றும் ரூ 20 படியான கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | | 40 000 |
| பொது ஒதுக்கீடு | | 2 000 |
| 01.04.2022 இல் நிறுத்தி வைத்த வருவாய் | | 8 000 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் - காணி | | 3 000 |
| விற்பனை வருமானம் | | 44 000 |
| விற்பனைக் கிரயம் | 18 000 | |
| நிர்வாகக் கிரயம் | 6 000 | |
| விநியோகக் கிரயம் | 4 000 | |
| நிதிக் கிரயம் | 2 000 | |
| 31.03.2023 இல் உள்ள சரக்கிருப்பு | 1 300 | |
| 2021/2022 வருமான வரி ஏற்பாடு | | 850 |
| காசாக செலுத்திய வருமான வரி | 1 200 | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணமும், திரண்ட பெறுமானத் தேய்வும் | 55 000 | 13 000 |
| வியாபார வருமதியாளர்கள் | 450 | |
| வியாபார சென்மதியாளர்கள் | | 320 |
| செலுத்திய இடைக்காலப் பங்கு லாபம் | 180 | |
| 01.04.2022 இல் விற்பனை உத்தரவாத ஏற்பாடு | | 160 |
| 8% வங்கிக் கடன் | | 2 000 |
| சொத்துப் பயன்படுத்தல் உரிமைக் கணக்கு | 450 | |
| காசும், காசுக்கு சமனானவையும் | 24750 | |
| | 113 300 | 113 300 |

**மேலதிக தகவல்கள்:**

(1) 31.03.2023 இல் உள்ள இருப்புக்களின் விபரம் வருமாறு

| இருப்பு உருப்படி | கிரயம் (000) | தேறிய நிகரத்தக்க பெறுமதி (000) |
|---|---|---|
| அரிசி | 600 | 550 |
| பருப்பு | 300 | 400 |
| சீனி | 400 | 200 |
| | 1300 | 1140 |

இருப்புக்களானவை கிரயப் பெறுமதியில் கணக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இருப்புக்களானவை உருப்படி ரீதியாக (பௌதீக ரீதியாக) கணிப்பிடப்படுவது வழக்கம். எனினும் இச் செயற்பாடு புறக்கணிக்கப்பட்டு இருப்பு பதிவிடப்பட்டுள்ளது.

(2) ஊழியர்களுக்கு அவர்களது சம்பளத்தில் ஊழியர் சேமலாப நிதிக்கு கம்பனி 12%, ஊழியர்கள் 8% பங்களிப்புச் செய்வது வழக்கம். ஆண்டுக் காலத்தில் ஊழியருக்கு செலுத்தப்பட்ட தேறிய சம்பளமான ரூ 1380 000 நிர்வாகக் கிரயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஊழியர் சேமலாப நிதி தொடர்பாக இவ்வருடம் எதுவும் செலுத்தப்படவில்லை. இதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

(3) 31.03.2022 இல் உள்ளவாறான ஆதனம் பொறி மற்றும் உபகரணமும் 01.04.2022 இல் உள்ளவாறான திரண்ட தேய்மானமும் வருமாறு

| | **31.03.2023 ல் (000ல்)**<br>**கிரயம் / மீள்மதிப்பு செலுத்தி** | **01.04.2022 ல் (000ல்)**<br>**திரண்ட பெறுமானத் தேய்வு** |
|---|---|---|
| காணி | 12 000 | – |
| கட்டிடம் | 18 000 | 4 800 |
| மோட்டார் வான் | 15 000 | 5 200 |
| இயந்திரப் பொறி | 10 000 | 3 000 |
| | 55 000 | 13 000 |

(4) இவ்வருடம் இடம்பெற்ற ஆதனம் பொறி உபகரணம் சேர்ப்புக்கள் அகற்றல்கள் தொடர்பான தகவல்கள் வருமாறு

| | சேர்ப்பு (000ல்) கிரயம் | அகற்றல் (000ல்) கிரயம் | கொள்வனவு திகதி | அகற்றலால் பெற்ற காசு (000ல்) | அகற்றல் திகதி |
|---|---|---|---|---|---|
| மோட்டார்வான் | 5000 | – | 01.01.2023 | – | – |
| பொறி | – | 4000 | 01.01.2019 | 3000 | 31.12.2022 |

ஆண்டுக் காலத்தில் சேர்க்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக சரியாக பதிவுகள் இடம்பெற்றுள்ளது. எனினும் ஆண்டுக்காலத்தில் அகற்றப்பட்ட பொறியில் இருந்து கிடைத்த பணம் ரூ 3000 000 ஆனது காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவிலும், பொறி இயந்திரக் கணக்கில் செலவிலும் பதியப்பட்டதை தவிர வேறு எந்தவித பதிவுகளும் இடம்பெறவில்லை. அனைத்து ஆதனம் பொறி உபகரணங்களுக்கும் (காணி தவிர) ஆண்டுக்கு கிரயத்தில் 10% பெறுமானத் தேய்விடப்படல் வேண்டும்.

(5) 01.04.2022 இல் காணியானது ரூ 8000 000 ஆக மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. இதே நாளில் கட்டிடமானது முதல் தடவையாக ரூ 1200 000 ஆக மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. இவ்வாண்டு இடம்பெற்ற மீள் மதிப்பீட்டுக்கான சீராக்கங்களுக்கான பதிவுகள் இடம்பெறவில்லை.

(6) 2021/2022 காலப்பகுதிக்கான வருமான வரி ரூ 900 000 என உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் இணக்கப்பட்டு செலுத்தப்பட்டது. 2022/2023 நிதி வருடத்துக்கான மொத்த வருமான வரி ரூ 600 000 என மதிப்பிடப்பட்டது.

(7) 01.04.2022 ரூ 1200 000 பெறுமதியான அலுவலக சாதனங்கள் 05 வருட சொத்துப் பயன்படுத்தல் உரிமை என்ற அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டது. ரூபா 200 000 உடனடி கொடுப்பனவாகச் செலுத்தப்பட்டது. குத்தகைக்கான வருடாந்த தவணைக் கட்டணம் ரூ 250 000 ஒவ்வொரு வருட இறுதியில் செலுத்தப்படுகிறது. குத்தகைக்கு பெற்ற சொத்தின் பயன்தரு ஆயுட்காலம் 6 வருடங்கள் ஆகும். குத்தகைக் கால முடிவில் சொத்தின் உரிமையானது குத்தகைக்கு எடுத்தவருக்கு கைமாற்றப்பட்டது. ஆரம்பக் கொடுப்பனவும், செலுத்தப்பட்ட தவணைக் கட்டணமும் காசுக் கணக்கில் செலவிடப்பட்டு சொத்துப் பயன்படுத்தல் உரிமைக் கணக்கில் பதியப்பட்டது தவிர வேறு எந்தவித பதிவுகளும் இடம்பெறவில்லை. இரு ஆண்டுகளுக்கான குத்தகை வட்டி விபரம்

| ஆண்டு | குத்தகை வட்டி |
|---|---|
| 2022/2023 | 180 000 |
| 2023/2024 | 120 000 |

(8) 31.03.2023 விற்பனை உத்தரவாத ஏற்பாட்டிற்கு ரூ 400 000 ஏற்பாடு செய்யப்படுகின்றது. 2021/2022 க்கான விற்பனை உத்தரவாத ஏற்பாட்டிற்காக ரூ 200 000 இணங்கப்பட்டு செலுத்தப்பட்டது. இது தவறுதலாக விநியோகக் கிரயத்தில் வரவிடப்பட்டது.

(9) வருட இறுதியில் பொது ஒதுக்கீட்டிற்கு ரூபா 200 000 மாற்றுவதுடன் ரூ 4000 000 தொகையினை நிறுத்தி வைத்த வருவாயிலிருந்து மூலதனமாக்கப்பட்டது.

(10) வங்கிக்கடன் வட்டி தொடர்பில் $\frac{1}{2}$ வருட வட்டி செலுத்தப்பட்டதுடன் இது நிதிக் கிரயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மிகுதி செலுத்தப்படல் வேண்டும்.

**வேண்டப்படுவது:**

LKAS - 01 "நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்" இன் படி பிரசுர நோக்கத்திற்கான காசா கம்பனிகள் பின்வரும் நிதிக் கூற்றுக்கள் (குறிப்புக்கள் உள்ளடங்கலாக)

1) 31.03.2023 முடிவடைந்த வருடத்துக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று

2) 31.03.2023 இல் முடிவடைந்த வருடத்துக்கான உரிமையாண்மை மாற்றல் கூற்று

3) 31.03.2024 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

(மொத்தம் 40 புள்ளிகள்)

**02)** (அ) லதா வரையறுக்கப்பட்ட தனிநபர் கம்பனி பாடசாலை பைகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள ஒரு நிறுவனமாகும். பின்வரும் தகவல்கள் 2023 மார்ச் மாதத்தில் உற்பத்தி செய்த பாடசாலை பைகளுக்குப் பயன்படுத்திய மூலப்பொருள் தொடர்பானவை

| திகதி | விபரம் | தொகை (மீற்றரில்) | மீற்றர் ஒன்றுக்கான விலை |
|---|---|---|---|
| 01 | ஆரம்ப துணி இருப்பு | 1000 | 125 |
| 08 | துணிக் கொள்வனவு | 4000 | 120 |
| 16 | உற்பத்திக்கு வழங்கப்பட்ட துணி | 4000 | ? |
| 21 | துணிக் கொள்வனவு | 6000 | 160 |
| 27 | உற்பத்திக்கு வழங்கப்பட்ட துணி | ? | ? |

2023 - மார்ச் - 31 இல் துணிகள் இருப்பு 3000 மீற்றர் ஆகும்.

**வேண்டப்படுவது:**

1) முதல் உள் முதல் வெளியே முறையில் 2023 மார்ச் மாதத்திற்கான மூலப் பொருள் களஞ்சியப் பேரேடு

2) நிறையளிக்கப்பட்ட சராசரி கிரய முறையில் 2023 மார்ச் மாதத்திற்கான களஞ்சியப்படு பேரேடு *(10 புள்ளிகள்)*

(ஆ) தனியார் பொருள் உற்பத்திக் கம்பனி ஒன்றின் மூலப்பொருள் தொடர்பான தகவல்கள் வருமாறு

மூலப்பொருள் உச்சநுகர்வு (வாராந்தம்) 900 அலகுகள்

மூலப்பொருள் இழிவு நுகர்வு (வாராந்தம் 700 அலகுகள்

ஒரு கட்டளைக்கான செலவு ரூபா 20

அலகுக் கிரயத்தில் 10 % இருப்பு பேணல் செலவு ஆகும்.

வருடாந்தக் கேள்வி 40 000 அலகுகள்

அலகுக் கிரயம் ரூபா 400, முதன்மைக் காலம் 8 – 12 வாரம்

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

1) சிக்கன கட்டளைக் கணியம்

2) மறுகட்டளை மட்டம்

3) உச்ச இருப்ப மட்டம்

4) இழிவு இருப்பு மட்டம் *(8 புள்ளிகள்)*

(இ) சந்தியா *PLC* ஆனது பாலினைப் பயன்படுத்தி யோக்கட் மற்றும் ஜஸ்கிறீம் போன்றவற்ற உற்பத்தி செய்கின்றது. இங்கு செய்முறை மற்றும் பொதியிடல் ஆகிய இரண்டும் உற்பத்தித் திணைக்களத்தையும் களஞ்சியம் எனும் சேவைத் திணைக்களங்களையும் கொண்டுள்ளது. இத்திணைக்களங்கள் யாவும் ஒரே இடத்தில் அமைந்துள்ளன. அதிகூடிய செயற்பாட்டு மட்டத்தில் அடுத்த வருடத்திற்கான பாதிடப்பட்ட மேந்தலைகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

| **விபரம்** | | **ரூபாவில்** |
|---|---|---|
| நேரில் கூலி | செய்முறை | 3000 |
| | பொதியிடல் | 7000 |
| | களஞ்சியம் | 2000 |
| மின்சாரம் | உற்பத்தி பகுதி | 8000 |
| | களஞ்சியம் | 1000 |
| கட்டிட காப்புறுதி | உற்பத்திப் பகுதி | 10000 |
| | களஞ்சியம் | 2000 |
| வாடகை | | 6000 |
| இயந்திர பெறுமானத் தேய்வு | | 10000 |

**மேலதிக தகவல்கள்:**

(1) மேந்தலைப் பகிர்வு அடிப்படைகளும் ஏனைய தொடர்புடைய தகவல்களும் பின்வருமாறு

| விபரம் | செய்முறைத் திணைக்களம் | பொதியிடல் திணைக்களம் | களஞ்சியம் |
|---|---|---|---|
| தளப்பரப்பு (சதுர மீற்றர்) | 3000 | 2000 | 1000 |
| கிலோ வாற் | 600 | 300 | |
| இயந்திரக் கிரயம் (ரூபாவில்) | 700000 | 300000 | |
| பாதிடப்பட்ட இயந்திர மணித்தியாலம் | 10000 | 3000 | |
| பாதிடப்பட்ட ஊழிய மணித்தியாலம் | 2000 | 5000 | |

(2) களஞ்சியப் பகுதியின் மொத்த மேந்தலைகள் செய்முறை மற்றும் பொதியிடல் திணைக்களங்களுக்கிடையில் 1 : 1 என்ற விகிதத்தில் மீள்பகிர்வு செய்யப்படுகின்றது.

(3) செய்முறைத் திணைக்களமானது மேந்தலைகளை இயந்திர மணித்தியால அடிப்படையிலும் பொதியிடல் திணைக்களமானது மேந்தலைகளை நேர்ஊழிய மணித்தயாலங்களின் அடிப்படையில் உறுஞ்சுகின்றது.

(4) பின்வரும் தகவல்கள் கம்பனியில் உற்பத்தி செய்யப்படும் இரண்டு உற்பத்திப் பொருட்களுடன் தொடர்புடையது.

| | யோக்கட் (அலகு ஒன்றிற்கு) | ஐஸ்கிறீம் (அலகு ஒன்றிற்கு) |
|---|---|---|
| நேர் ஊழியக் கிரயம் (ரூபா) | 15 | 20 |
| நேர் மூலப் பொருள் (ரூபா) | 30 | 40 |
| உண்மையான நேர் ஊழிய மணித்தியாலங்கள் | | |
| செய்முறைத் திணைக்களம் (மணி) | 2 | 3 |
| பொதியிடல் திணைக்களம் (மணி) | 3 | 2 |
| உண்மையான இயந்திர மணித்தியாலங்கள் | | |
| செய்முறைத் திணைக்களம் (மணி) | 2 | 3 |
| பொதியிடல் திணைக்களம் (மணி) | 3 | 1 |

**வேண்டப்படுவது:**

1) பகிர்வு அடிப்படையில் தெளிவாக காட்டக் கூடியதான மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணை
2) செய்முறை மற்றும் பொதியிடல் திணைக்களங்களின் மேந்தலை உறிஞ்சல் வீதங்கள்
3) யோக்கற் அலகு ஒன்றின் உற்பத்திக் கிரயம்
4) ஐஸ்கிறீம் அலகு உற்பத்திக் கிரயத்தில் ரூபா 3.10 இலாபமாக பேணப்படுமாயின் ஐஸ்கிறீம் அலகு ஒன்றின் விற்பனை விலை (22 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

**03)** (அ) சிவா என்பவர் 01.04.2022 வியாபாரம் ஒன்றைத் தொடங்கினார். 31.03.2023 இல் உள்ளவாறான சிவா வியாபாரத்தின் வரைபு நிதிக் கூற்றக்களில் இருந்து பிரத்தெடுக்கப்பட்ட மீதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூ "000" |
|---|---|
| ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் (கிரயத்தில் | 5000 |
| இருப்புக்கள் | 600 |
| வியாபார வருமதிகள் | 750 |
| முற்பணக் காப்புறுதி | 400 |
| காசு மீதி | 700 |
| வியாபாரக் கொடுக்குமதிகள் | 200 |
| முற்பண செலவுகள் | 120 |
| முற்பணமாகப் பெற்றமை | 300 |
| 31.03.23 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபம் | 500 |
| 01.04.22 இல் ஈடுபடுத்திய மூலதனம் | 6470 |
| அடட்டுறு செலவுகள் | 100 |

31.03.2023 இல் முடிவடைந்த வருடத்துக்கான வரைபு நிதி அறிக்கைகளை தயாரிக்கும் போது பின்வரும் விடயங்கள் கருத்தில் எடுக்கப்படவில்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

*(1)* 2023 March மாதத்திற்கான காப்புறுதி ரூ 50000 ஆனது முற் செலுத்திய காப்புறுதி கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

*(2)* 2023 March மாதத்திற்கான தொலைபேசிக் கட்டணம் ரூ 2000, 31.03.2023 இல் செலுத்தப்படவோ, கணக்கில் பதியப்படவோ இல்லை.

*(3)* 31.03.2023 இல் 60000 ரூபா பட்டியல் விலையில் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை (பெற்ற வியாபாரக் கழிவு 5%)

*(4)* 25.03.2023 இல் ரூ 100 000 கிரயமான பொருட்கள் 120 000 ரூபாவுக்கு காசுக்கு விற்பனை செய்யப்பட்டமை கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டவில்லை.

*(5)* 31.03.2023 இல் முடிவடைந்த நிதியாண்டிற்கு ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமானத் தேய்வு 200 000 ரூபா.

*(6)* இவ்வருடத்தில் ரூ 50000 கிரயமான இருப்பு உருப்படிகள் தீயினால் அழிவடைந்துள்ளன. அவற்றக்கு தேறக்கூடிய பெறுமதி ஒன்றும் காணப்படவில்லை. எனினும் இவ்வுருப்படிகள் 31.03.2023 இல் உள்ளவாறான இருப்புக்களின் கிரயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(7) வாடிக்கையாளர் ஒருவர் 50 உருப்படிகளை கொள்வனவு செய்வதற்கு கட்டளை ஒன்றை வைத்துள்ளார். இவற்றுக்கான விற்பனை விலை ரூ 150 000 ஆகக் காணப்படுகிறது. இத்தொகையானது நடைமுறை வருடத்தில் பெறப்பட்டு முற்பணமாகப் பெற்றவை கணக்கில் பதியப்பட்டுள்ளத. ஆனால் இவற்றில் அரைவாசிப் பொருட்கள் மட்டுமே 31.03.2023 வரை வாடிக்கையாளருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றின் கிரயம் ரூ 50000 ஆகும். இவ்விநியோகம் தொடர்பில் எதுவித பதிவும் கணக்கேடுகளில் மேற்கொளள்ப்படவில்லை.

(8) 25.03.2023 இல் வியாபாரக் கடன் கொடுத்தோருக்கு வழங்கிய ரூ 10000 காசோலையொன்று 31.03.2023 இல் வங்கியால் மறுக்கப்பட்டுள்ளமையை 05.04.2023 இல் பெறப்பட்ட வங்கிக் கூற்று வெளிக்காட்டியுள்ளது.

(9) சென்ற காலத்தில் அறவிடமுடியாக் கடனாக பதிவழிக்கப்பட்டிருந்த கடன்பட்டோர் தொகைக்கான 50000 ரூபா குறித்த கடன்பட்டோரினால் நேரடியாக வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ளமையை வங்கிக் கூற்று வெளிக்காட்டியுள்ளது.

(10) வங்கி கீழ்வரும் அறவீடுகளையும் மேற்கொண்டிருந்தமையையும் வங்கிக் கூற்று வெளிப்படுத்தியுள்ளது.

| | ரூபா |
|---|---|
| வங்கிக் கட்டணம் | 2000 |
| காசோலைப் புத்தகம் | 1000 |

**வேண்டப்படுவது:**

1) கணக்கீட்டு சமன்பாட்டினைப் பயன்படுத்தி (1) - (10) வரையான உருப்படிகளின் இரட்டை விளைவுகளைப் பெறுமதிகளுடன் காட்டுவதுடன், இவ்விளைவுக்கு விடையிப்பதற்காக கீழே தரப்பட்டுள்ள மாதிரியைப் பயன்படுத்துக.

| நடவடிக்கை இல. | சொத்தக்கள் | | | | | வியாபார கொடுக்குமதிகள் | அட்டுறு செலவுகள் | முற்பணமாகப் பெற்றவை | உரிமையாண்மை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதனம் பொறி மற்றும் உபகரணம் | இருப்புக்கள் | வியாபார வருமதிகள் | முற்செலுத்திய காப்புறுதி | காசு | | | | |
| மீதி | | | | | | | | | |
| (1) | | | | | | | | | |
| (2) | | | | | | | | | |
| (3) | | | | | | | | | |
| (4) | | | | | | | | | |
| (5) | | | | | | | | | |
| (6) | | | | | | | | | |
| (7) | | | | | | | | | |
| (8) | | | | | | | | | |
| (9) | | | | | | | | | |
| (10) | | | | | | | | | |
| திருத்திய மீதி | | | | | | | | | |

(20 புள்ளிகள்)

2) மேலே தரப்பட்ட (1), (2), (3), (7), (9) ஆகிய உருப்படிகளைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளைத் தருக. *(10 புள்ளிகள்)*

(ஆ) வரையறுக்கப்பட்ட மதன் கம்பனியின் கணக்காளரால் தயாரிக்கப்பட்ட கொள்வனப் பேரேட்டுக் கட்டுப்பாட்டு மீதி 71900 ரூபா ஆகவும் கொள்வனவுப் பேரேட்டு பட்டியல் மீதிகளின் கூட்டுத்தொகை 68700 ரூபா ஆகவும் இருந்தது. அதற்கான காரணங்கள் வருமாறு

(1) கடனடிப்படையில் ரூ 5000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்று கொள்வனவுப் பேரேட்டு கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(2) வெளித்திரும்பல் தொகையானது 1500 ரூபா கொள்வனவுப் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கிலிருந்து விடுபட்டிருக்கின்றது.

(3) சசி என்பவருக்கு காசோலை மூலம் செலுத்தப்பட்ட 2000 ரூபா கொள்வனவுப் பேரேட்டில் உள்ள அவரது கணக்கில் வரவு வைக்கப்படவில்லை.

(4) பெற்ற கழிவுத் தொகையானது 300 ரூபா கட்டுப்பாட்டு கணக்கில் இரு தடவைகள் பதியப்பட்டிருந்தது.

(5) வியாபாரக் கடன்பட்டோருடன் எதிர்த்தீர்த்தலூடாக சீராக்கப்பட்ட 1000 ரூபா கொள்வனவுப் பேரேட்டில் சீராக்கப்படவில்லை.

(6) ஒரு மாதக் கடன்கொள்வனவுத் தொகையான 8000 ரூபா கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவு வைக்கப்படவில்லை.

(7) கொள்வனவுப் பேரேட்டிலுள்ள சங்கர் கணக்கில் 500 ரூபா குறைத்துக் காட்டப்படடிருந்தது.

(8) ஒரு விநியோகஸ்தர் கணக்கு மீதயான 7500 ரூபா கொள்வனவுப் பேரேட்டு பட்டியல் மீதிகளிலிருந்து தவறவிடப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது:**

1) திருத்தப்பட்ட கொள்வனவுப் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கு

2) திருத்தப்பட்ட கொள்வனவுப் பேரேட்டுப் பட்டியல் மீதிக் கூற்று *(10 புள்ளிகள்)*

*(மொத்தம் 40 புள்ளிகள்)*

**04)** (அ) சுமதி வணிகமானது 2023 ஜனவரி 1 இல் பெறுமதிசேர் வரி (VAT) அறவீடு செய்வதற்கு பதிவு செய்யப்பட்ட வணிகமாகும். இவ்வணிகத்தின் ஜனவரி மாதம் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்கள் வருமாறு.

(1) 700 000 ரூபா காசும் 300 000 பெறுமதியான மோட்டார் வாகனமும் மூலதனமாக ஈடுபடுத்தப்பட்டது.

(2) மொறட்டுவ தளபாடக் கம்பனியிடமிருந்து 15% VAT உள்ளடங்கலாக ரூ 92000 இற்கு அலுவலக தளபாடங்கள் வாங்கப்பட்டன.

(3) பட்டியல் விலையில் மீள் விற்பனைக்கான பொருட்கள் பின்வருவோரிடம் கொள்வனவு செய்யப்பட்டன.

★ தேவா ரூ 100000

★ சில்வா ரூ 50000

கொள்வனவின் போது 10% வியாபாரக் கழிவு வழங்குனரால் வழங்கப்பட்டது. இவற்றுக்கு 15% VAT உள்ளடக்கப்படவில்லை.

(4) பட்டியல் விலையில் கடனுக்கு விற்பனை செய்யப்பட்ட பண்டங்கள் தொடர்பான விபரம் பின்வருமாறு

- ★ ஆதி ரூ 80000
- ★ சிவன் ரூபா 60000

பட்டியல் விலையில் 10% வியாபாரக் கழிவு அனுமதிப்பதெனவும் 15% பெறுமதிசேர் வரி அறவிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

(5) வாடிக்கையாளர் திருப்பியனுப்பிய பொருட்கள் தொடர்பான விபரம் வருமாறு

ஆதி 5750 (15% VAT உள்ளடங்கலாக)
சிவன் 13800 (15% VAT உள்ளடங்கலாக)

(6) ஜனவரி மாதம் இடம்பெற்ற காசுக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விபரம் வருமாறு

காசுப் பெறுவனவு

- ★ 15% VAT உள்ளடங்கலாக காசு விற்பனை ரூ 57500
- ★ வியாபார வருமதியாளரான ஆதியிடம் பெற்ற காசோலை ரூ 18000 அனுமதித்த கழிவு ரூ 2000
- ★ வியாபார வருமதியாளரான சிவனிடம் ரூ 3000 கழிவு அனுமதித்து ரூ 17000 காசு பெறப்பட்டது.
- ★ பெற்ற வட்டி வருமானம் ரூ 7000

காசோலை மூலமான கொடுப்பனவு

- ★ மொறட்டுவ தளபாடக் கம்பனிக்கு ரூ 42000
- ★ வழங்குனரான தேவாவுக்கு 1800 ரூபா கழிவு பெற்று 48200 ரூபா காசோலை வழங்கப்பட்டது.
- ★ வழங்குனரான சில்வாவுக்கு ரூ 4000 கழிவு பெற்று ரூ 40000 ஆன கடன்தொகை தீர்க்கப்பட்டது.
- ★ செயற்பாட்டுச் செலவினக் கொடுப்பனவு ரூ 20000
- ★ காசுக் கொள்வனவு 15% VAT உள்ளடங்கலாக ரூ 69000

**மேலதிக தகவல்கள்:**

- ➢ 31.01.2023 இல் இருந்த சரக்கிருப்புக்களின் கிரயம் ரூ 88 000
- ➢ மோட்டார் வாகனத்திற்கு கிரயத்தில் 5% உம் தளபாடத்துக்கு கிரயத்தில் 10% உம் நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்விடப்பட வேண்டும்.

**வேண்டப்படுவது**

1) (i) காசுப் பெறுவனவு நாளேடு (ii) காசுக் கொடுப்பனவு நாளேடு

2) (iii) விற்பனை நாளேடு (iv) கொள்வனவு நாளேடு

(v) உட்திரும்பல் நாளேடு

3) பொதுப்பேரேட்டில் கீழ்வரும் கணக்குகள்

(i) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு

(ii) கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு

(iii) VAT கட்டுப்பாட்டுக் கணக்கு

4) 2023 ஜனவரி 31 முடிவடைந்த ஒரு மாதத்திற்கான இலாப நட்டக் கூற்று

*(30 புள்ளிகள்)*

(ஆ) இலாப நோக்கமற்ற அமைப்பான சீடா விளையாட்டுக் கழகத்தில் 200 ரூபா வருடாந்த சந்தா செலுத்தும் 40 அங்கத்தவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். 01.01.2021 இல் 8 அங்கத்தவர்கள் 2020 ஆம் ஆண்டுக்கான சந்தாவை செலுத்தவில்லை என்பதுடன் 10 பேர் 2021 இற்கான சந்தாவையும் அதில் 4 பேர் 2022 இற்கான சந்தாவையும் செலுத்தி இருந்தனர். இரண்டு பேர் 31.12.2021 அன்று முடிவுற்ற ஆண்டுக் காலத்தில் 2020 இற்கான சந்தாவை செலுத்தாமலேயே விலகிச் சென்றுவிட்டனர். 5 பேர் 2021, 2022 ஆகிய இரு ஆண்டுகளுக்குமான சந்தாவைச் செலுத்தி புதிதாக சேர்ந்து கொண்டனர். 31.12.2021 4 அங்கத்தவர்கள் 2022, 2023 இற்கான சந்தாவை செலுத்தியிருந்தனர். மேலும் 7 பேர் 2021 இற்கான சந்தாவை மட்டும் செலுத்த வேண்டியிருந்தது.

வேண்டப்படுவது

1) 2021 ஆம் ஆண்டுக்கான சந்தாக் கணக்கு *(10 புள்ளிகள்)*

மொத்தம் *40* புள்ளிகள்)

***05)*** *(அ)* வாசன் நேசன் ஆகியோரது பங்குடமையில் 01.04.2022 இல் தாசன் புதியவராக சேர்ந்து கொண்டார்.

➢ வாசன் நேசன் உடன்படிக்கை வருமாறு

★ இலாப நட்டம் பகிரும் விகிதம் பங்குடமை சட்டத்தின் படி

★ வருடாந்த மூலதன வட்டி 08% ஆகும்.

★ பங்காளர் சம்பளம்

| | முன் ஆறு மாதம் (மாதாந்தம்) (ரூ 000) | பின் ஆறு மாதம் (மாதாந்தம்) (ரூ 000) |
|---|---|---|
| வாசன் | 100 | 150 |
| நேசன் | 150 | 200 |

➢ வாசன், நேசன், தாசன் உடன்படிக்கை வருமாறு

★ இலாப நட்டம் பகிரும் விகிதம் வாசன், நேசன், தாசன் முறையே 2 : 2 : 1

★ மூலதன வட்டி வருடாந்தம் 10% (சீராக்கிய மூலதன மீதி)

★ வாசன் நசன் சம்பளம் முன்னைய உடன்படிக்கையின் படியும் தாசனுக்கு மாதாந்தம் ரூபா 100 000 வழங்கப்படும்.

➢ 01.04.2022 இல் தாசன் சேரும் போது பின்வருவனவற்றை மூலதன பங்களிப்பாக கொண்டு வந்தார்.

| | |
|---|---|
| காசாக ரூபா | 3000 000 |
| மோட்டார் வான் | 3000 000 |

மேலும் இத்திகதியில் பழைய பங்காளர்களான வாசன், நேசன் முறையே 2000 000, ரூபா 3000 000 மோட்டார் வாகனத்தையும் மேலதிக மூலதனமாக கொண்டு வந்தனர்.

இதில் புதிய பங்காளனின் காசுப் பங்களிப்பு மட்டும் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது. இத்துடன் தாசன் சேரும் போது தாசனின் நன்மதிப்பு பங்கு 600 000 என மதிப்பிடப்பட்டது. நன்மதிப்பானது மூலதன கணக்கினூடாக சீராக்கப்படும்

31.03.2023 இவ் உள்ளவாறான பரீட்சை மீதி வருமாறு

| | ரூபா "000" | ரூபா "000" |
|---|---|---|
| 01.04.22 இல் மூலதனக் கணக்கு | | |
| வாசன் | | 7000 |
| நேசன் | | 7000 |
| 01.04.22 இல் நடைமுறைக் கணக்கு | | |
| வாசன் | | 1000 |
| நேசன் | 400 | |
| கடன் - நேசன் (01.10.2022 இல் பெறப்பட்டது) | | 6000 |
| கடன் வட்டி நேசன் | 100 | |
| தாசனின் பங்களிப்பு | | 3000 |
| 31.03.2023 இல் ஆதனப் பொறி மற்றும் உபகரண | | |
| கொண்டு செல் மீதி | 25000 | |
| பெறுமானத் தேய்வு | 2500 | |
| விங்பனைகள் | | 40000 |
| செயற்பாட்டு செலவுகள் | 14400 | |
| விற்பனைக் கிரயம் | 12500 | |
| 31.03.2023 இல் சரக்கிருப்பு | 1800 | |
| வியாபார வருமதிகள் | 4300 | |
| காசு | 4000 | |
| வியாபார கொடுக்குமதிகள் | | 1000 |
| | 65000 | 65000 |

கீழ்வரும் சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும்.

*(1)* பங்காளர்களின் மோட்டார் வாகன பங்களிப்புக்கு வருடாந்தம் 20% தேய்விடப்பட வேண்டும்.

*(2)* 31.03.2023 இல் உள்ள சரக்கிருப்பின் தேறிய தேறத்தக்க ரூபா 1500 000 ஆகும்.

*(3)* பின்வரும் பங்காளரின் பொருள் பற்றுக்கள் வருமாறு

வாசன் ரூபா 400 000

நேசன் ரூபா 300 000

தாசன் ரூபா 300 000

*(4)* ஒவ்வொரு பங்காளரும் எடுப்பனவு செய்த முதல் மூன்று மாத சம்பளங்கள் செயற்பாட்டு செலவில் உள்ளடங்கியுள்ளன.

*(5)* பங்குடமையின் வருட வாடகை தொடர்பில் பங்காளன் நேசன் ரூபா 400 000 தனது சொந்தப் பணத்தில் செலுத்தியிருந்தார்.

(6) வாசனின் ஆயுள் காப்புறுதி கட்டணமான ரூபா 300 000 பங்குடமையால் செலுத்தப்பட்டு அத்தொகை செயற்பாட்டு செலவில் உள்ளடங்கியுள்ளது.

**வேண்டப்படுவது:**

1) 31.03.2023 இல் முடிவுற்ற வருடத்துக்கான இலாப நட்டக் கூற்று (பகிர்வுகள் உட்பட)

2) பங்காளர் நடைமுறைக் கணக்கு மற்றும் மூலதனக் கணக்கு. *(22 புள்ளிகள்)*

(ஆ) 2023 க. பொ. த. உயர்தர வணிகப் பிரிவு மாணவர்களுக்கான கணக்கீடு பாட இறுதி செயலமர்வு ஒன்றினை பாடசாலை ஒன்றின் பழைய மாணவர் சங்கம் ஒரு நாள் மட்டும் 4 மணித்தியாலம் நடாத்த முன்வந்துள்ளது. இதற்கு குறிப்பிட்ட பாடசாலையின் வெளிநாட்டு பழைய மாணவர் ஒன்றியம்பங்கு பற்றும் மாணவர் ஒருவருக்கான அன்பளிப்புத் தொகையாக ரூபா 2000 ஐ வழங்க முன் வந்துள்ளது.

இக்கணக்கீடு பாட செயலமர்வுக்காக மதிப்படப்பட்ட கிரயங்கள் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| ★ | விரிவுரையாளர் கட்டணம் மணித்தியாலம் ஒன்றுக்கு | ரூபா | 5000 |
| ★ | நாள் ஒன்றுக்கான மண்டப வாடகை | ரூபா | 40000 |
| ★ | கையேடு ஒன்றின் பிரதிக்கான விலை | ரூபா | 500 |
| ★ | மாணவர் ஒருவருக்கு உணவு மற்றும் உபசரணை செலவு | ரூபா | 600 |
| ★ | கையேடு ஒன்றுக்கான கோவை | ரூபா | 100 |
| ★ | மாணவர் ஒருவருக்கான தண்ணீர் | ரூபா | 200 |
| ★ | மாணவர் ஒருவருக்கான எழுது கருவி | ரூபா | 100 |

**வேண்டப்படுவது:**

1) இச்செயலமர்வுக்கான நிலையான கிரயம்

2) இச்செயலமர்வுக்கான மாறும் கிரயம்

3) மொத்தக் கிரயத்தை ஈடுசெய்வதற்கு செயலமர்வில் பங்கு பற்றும் மாணவர் எண்ணிக்கை

4) 200 மாணவர்கள் இச்செயலமர்வில் பங்குபற்றுவார்களாயின் எதிர்பார்க்கும் மிகை யாது?

5) ரூபா 500 000 அன்பளிப்பாகக் கிடைக்குமாயின்

   (a) செயலமர்வில் கலந்து கொள்ள வேண்டிய மாணவர் எண்ணிக்கை

   (b) எதிர்பார்க்கும் மிகை

6) விரிவுரையாளருக்கான மணித்தியால கொடுப்பனவுக்கு மேலதிகமாக மாணவர் ஒருவர் சார்பில் கிடைக்கப்பெறும் அன்பளிப்புத் தொகையிலும் 5% விரிவுரையாளருக்கு வழங்கப்படுமாயின் மொத்தக் கிரயத்தை ஈடு செய்ய எத்தனை மாணவர்கள் செயலமர்வில் பங்கு பற்ற வேண்டும். *(18 புள்ளிகள்)*

*(மொத்தம் 40 புள்ளிகள்)*

**06)** (அ) சிவா *PLC* இன் 31.03.2021 மற்றும் 31.03.2023 இல் உள்ளவாறான அடுக்கிய நிதிநிலைமைக்கூற்று வருமாறு

| | **31.03.2023 இல்** | **31.03.2022 இல்** |
|---|---|---|
| ஆதனம் பொறி மற்றும் உபகரணம் | | |
| (முன் கொண்டு செல் மீதி) | 18000 | 25000 |
| 10% நிலையான வைப்பு | – | 2000 |
| வியாபார சரக்கிருப்பு | 500 | 1000 |
| வியாபார வரமதியாளர் | 1400 | 1200 |
| வருமதியான நிலையான வைப்பு வட்டி | – | 100 |
| காசும் காசிற்கு சமனபனவைகள் | 17550 | 4750 |
| | **37450** | **34050** |
| கூ. சாதாரண பங்கு மூலதனம் | 30000 | 28000 |
| நிறத்தி வைத்த வருவாய் | 4350 | 3500 |
| 10% வங்கிக் கடன் | 2000 | 1000 |
| குத்தகை பொறுப்புக்கள் | 500 | 750 |
| வியாபார சென்மதியாளர் | 400 | 700 |
| வரி ஏற்பாடு | 200 | 100 |
| வங்கிக் கடன் வட்டி நிலுவை | 50 | – |
| | **37450** | **34050** |

**மேலதிக தகவல்கள்:**

*(1)* நடைமுறை வரடத்திற்கான பெறுமானத் தேய்வு ரூ 500,000 வருமான வரிச் செலவு ரூ 400,000 ஆகும்.

*(2)* இவ்வாண்டில் வங்கிக்கடன் ஆனது 01.10.2022 இல் பெறப்பட்டதாகும். அத்தொடு செலுத்தியுள்ள இடைக்காலப் பங்கு இலாபம் ரூ 300,000

*(3)* குத்தகை தவணைக்கட்டணமாக 31.03.2023 இல் ரூ 300,000 காசு செலுத்தப்பட்டுள்ளது.

*(4)* ஆண்டுக் காலத்தில்ரூ 8000,000 கிரயமானதும் அகற்றல் தினத்தில் ரூ 3000,000 திரண்ட பெறுமானத் தேய்வைக் கொண்டதுமான சொத்து ஒன்று அகற்றப்பட்டபோது ரூ 1000,000 இலாபம் பெறப்பட்டுள்ளது. இதனைத் தவிர வேறு சொத்துக்கள் நட்பாட்டில் கொள்வனவு விற்பனை இடமடபெறவில்லை.

*(5)* 01.10.2021 இல் மேற்கொள்ளப்பட்ட ஒரு வருட முதிர்வு கொண்ட நிலையான வைப்பானது 01.10.2022 இல் வட்டி நிலுவையோடு முடிவுறுத்தப்பட்டு பணம் ரூ 22000 பெறப்பட்டுள்ளது.

*(6)* நடப்பு ஆண்டில் ஒதுக்கம் மூலதனமாக்கிய பங்கு மூலதன தொகை ரூ 500,000

**வேண்டப்படுவது:**

LAS - 7 (காசுப் பாய்ச்சல் கூற்று) இன் படி நேரில் முறையிலான காசு பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்க. *(20 புள்ளிகள்)*

(ஆ) விமல் *PLC* ஆனது உள்ளூர் சந்தைக்கு குளிர்பானப் போத்தல்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்காக வினைத்திறனுடைய இயந்திரத்தைக் கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளது. இவ்வியந்திரத்தின் மதிப்பிட்ட விலை 600,000. மேலும் இயந்திரத்தை கொண்டு வருதலுக்கான கிரயம் மற்றும் பொருத்ததல் கிரயம் முறையே ரூ 30000 உம் ரூ 70000 உம் ஆகும்.

இவ்வியந்திரத்தின் பயன்தரு ஆயட்காலம் 4 வருடங்கள் என மதிப்பிடப்பட்டது. அத்தொடு இயந்திரத்தின் எஞ்சிய பெறுமதி ரூ 300,000 ஆகும். இச்செயற்திட்டத்திற்குத் தேவைப்படும் ஆரம்ப தொழில்படு மூலதனத் தேவைப்பாடு ரூ 100,000 ஆக மதிப்பிடப்பட்டதோடு இத்தொகை செயற்திட்ட இறுதியில் மீளப் பெறப்படும். இச் செயல்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் விற்பனை வருமானங்கள், செலவுகள் விபரம் வருமாறு

| வருடம் | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| விற்பனை வருமானம் (ரூ 000) இல் | 500 | 700 | 900 | 1000 |
| செலவுகள் (ரூ 000) இல் (வருடாந்த பெறுமானத் தெய்வு உட்பட) | 300 | 400 | 450 | 500 |
| கழிவீட்டு காரணி 10% | 0.91 | 0.83 | 0.75 | 0.68 |

★ வருடாந்தம் இலாபத்தில் 10% வருமான வரி செலுத்தப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

**வேண்டப்படுவது:**

1) செயற்திட்டத்தின் ஆரம் காசு வெளிப்பாய்ச்சல்
2) செயற்திட்டத்தின் ஒவ்வொரு வருடத்திற்குமான தேறிய காசுப்பாய்ச்சல்
3) செயற்திட்டத்தின் தேறிய நிகழ்கால பெறுமதி (NPV)
4) NPV அடிப்படையில் செயற்றிட்டம் குறித்த சிபார்சு *(10 புள்ளிகள்)*

(இ) சுமன் *PLC* 01.04.2022 இல் தனது செயற்பாட்டை ஆரம்பித்துள்ளது. இக்கம்பனியின் 31.03.2023 இல் முடிந்த ஆண்டுடன் தொடர்புடைய தகவல்கள் வருமாறு :

| 31.03.2023 இல் உள்ளவாறானவை | ரூ '000' ல் |
|---|---|
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | 120 |
| வியாபார இருப்பக்கள் | 30 |
| செயற்பாட்டு செலவு முற்பணம் | 10 |
| வியாபார கடன்பட்டோர் | 80 |
| காசு மீதி | 40 |
| மொத்த சொத்துக்கள் | 400 |

மேலதிக தகவல்கள்:

★ 31.03.2023 இல் முடிந்த ஆண்டுக்கானவைகள்

| | |
|---|---|
| விற்பனைகள் | ரூ 400,000 |
| நடைமுறை வீதம் | 2% |
| தேறிய இலாப வீதம் | 10% |

கம்பனி தனது விற்பனைகள் அனைத்தையும் கடனுக்கு மேற்கொள்வதுடன் விற்பனையில் 20% இலாபம் பெறுவதை கொள்கையாகக் கொண்டுள்ளது.

வருடத்தில் 360 நாட்கள் எனக் கொள்க.

(கம்பனி வரி விடுதலைக் காலத்தில் செயற்படுகின்றது.)

**வேண்டப்படுவது:**

*(1)* இருப்பு புரள்வு விகிதம்

*(2)* விரைவு சொத்து விகிதம்

*(3)* உரிமை மீதான திரும்பல் விகிதம்

*(4)* கடன்பட்டோர் பணம் சேகரிப்பு காலம்

*(5)* கடன் விகிதம் *(10 புள்ளிகள்)*

*(மொத்தம் 40 புள்ளிகள்)*